SLPPI

service de logopédie, psychologie et psychomotricité intercommunal

Tamoul

# யாருக்காக ?

*பேச்சுப் பயிற்சி, உளவியல் மற்றும் உளவிவேகம் தொடர்பான எமது சேவைகள் பிள்ளைகளுக்கு 1H க்கு 11 H வழங்கப்படுகின்றன. (குழந்தை மற்றும் ஆரம்பப்பாடசாலைகள்-CO).*

# எமது சேவைகள் :

## உளவியல்

*உளவியல் சிகிச்சையாளர்கள் பிள்ளைகள் எதிர்நோக்கும் பின்வரும் பிரச்சனைகளுக்கு உதவிபுரியமுடியும்.*

- *கற்பகற்கு ( வாசித்தல், எழுதுதல், ஞாபகங்தகொள்ளல், கவனத்தை ஒரு விடயத்தில் குவித்தல்...)*
- *கூச்சசுபாவம் மற்றும் குழப்படித்தன்மையிலிருந்து விடுபடல்,*
- *உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி நெறிப்படுத்தல்*
- *கோபப்படுதல், சண்டையிடுதல் மற்றும் மற்றைய பிள்ளைகளை ஒதுக்குதல் தொடர்பான பிரச்சனைகள்*
- *பெற்றோர் மற்றும் சகோதரங்களுடனான உறவுகள், பெற்றோரின் பிரிவு, மற்றும் மரணத்துக்கம்....*
- *பிரச்சனையின் மூலகாரணத்தைக் கண்டடையும் முகமாக நிலைமை தொடர்பான அறிக்கை உருவாக்கல்*

*உளவியற் சிகிச்சையாளர்கள் பற்றி முக்கியமாக அறிந்திருக்கவேண்டியவை:*

- *அவர்கள் தீர்வுகளை முன்வைப்பார்கள் ஆனால், தீர்மானிப்பதில்லை.*
- *அதிக துன்பமுள்ள நிலையைப்போக்க அவர்கள் உதவுபவர்கள்*
- *பாடசாலைக் கல்வியில் அவர்கள் பிள்ளைகளுக்கு உதவி செய்பவர்கள்,*
- *பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் ஆலோசனை வழங்குவார்கள்*
- *பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளையும் கேட்டறிய அவர்கள் தயாரானவர்கள்*

Route de Moncor 14
1752 Villars-sur-Glâne

www.slppi.ch
026 407 38 62
administration.slppi@edufr.ch

Tamoul

# உளவிவேகம்

*பின்வரும் சிக்கல்களை எதிர்நோக்கும் பிள்ளைகளுக்கு உளவிவேகச் சிகிச்சையாளர்கள் உதவக்கூடியவர்கள் :*

- *உடலசைவுகள், உடற்சமநிலை மற்றும் அங்க அசைவுகளின் சீரமைப்பு,*
- *அங்க அசைவுகளின் மந்த நிலை அல்லது மாறாக அதிவீச்ச நிலை போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்,*
- *எந்தக் கையால் எழுதுவது மற்றும் இடம்-வலம் குழுப்பநிலை போன்றவற்றைத் தீர்க்க உதவுதல்,*
- *கண்டதை வரைதலுக்கான இயலாமை, வரைபடத்தில் தான் நிற்குமிடத்தைத் தீர்மானித்தல் இயலாமை போன்ற இடம் தோடர்பான பிரச்சனைகள்.*
- *கால ஓட்டத்தை கணித்தலில் உள்ள குழப்பங்கள் (முன்னர்-பின்னர், நாளில் நேரக்கணிப்பு, வாரம், காலலயம்...)*
- *சுய நம்பிக்கையின்மை,*
- *எழுத்துப் பிரச்சனை (தெளிவின்மை)*
- *உணர்வுகளை நெறிப்படுத்தல்*

# பேச்சுப் பயிற்சி

*பேச்சுப் பயிற்சியாளர்கள் பின்வரும் விடயங்களில் பிள்ளைகளுக்கு உதவமுடியும் :*

- *கதைத்தல் (பிரஞ்சு மொழியிலும், தாய்மொழியிலும்)*
- *சில சொற்களை அல்லது சில சத்தங்களைப் பயிலல்,*
- *வாக்கியங்களைச் சரியாக அமைத்தல்,*
- *புதிய சொற்களைக் கற்றல்,*
- *வாய்வழி உரையாடலைப் புரிந்துகொள்ளல்,*
- *கொன்னை தட்டுதல் பிரச்சனைக்குத் தீர்வு காணல்,*
- *பனுவலை வாசித்து விளங்கிக்கொள்ளல்*
- *ஒரு பனுவலை உருவாக்குதல்,*
- *கணித அறிவாற்றல்,*
- *உணவு "விழுங்களில்" உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணல்*

SLPPI
service de logopédie, psychologie
et psychomotricité intercommunal

Tamoul

பேச்சுப் பயிற்சி, உளவியல் மற்றும் உளவிவேகம் தொடர்பான சிகிச்சையாளர்கள் தொழில் ரீதியாக தகவல்களை இரகசியமாகப் பேணக் கடைமைப்பட்டவர்கள் பெற்றொரின் அனுமதியுடனேயே அவர்கள் தகவல்களை ஆசிரியர்களும் பகிர்ந்து கொள்வார்கள்.

## எவ்வாறு விண்ணப்பித்தல் ?

- பேச்சுப் பயிற்சி, உளவியல் மற்றும் உளவிவேகம் தொடர்பான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு www.slppi.ch அல்லது https://www.fr.ch/dics/formation-et-ecoles/4-15-ans/services-de-logopedie-psychologie-et-psychomotricite எனும் இணையத் தொடர்பிலுள்ள பத்திரத்தைப் பூர்த்தி செய்தல்வேண்டும்.
- நீங்கள் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடமோ அல்லது மேற்கூறப்பட்ட சிகிச்சையாளர்களிடமோ எவ்வாறு பத்திரத்தைப் பூர்த்தி செய்வது என்பதை அறிந்துகொள்ளமுடியும்.
- பின்னர் பத்திரத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் :

  *SLPPI*
  *Rte de Moncor 14*
  *Villars-sur- Glâne*
- உங்களது விண்ணப்பம், SIPLP நிர்வாகத்தினால் ஏற்கப்படுமிடத்து, சேவை இலவசமாக வழங்கப்படும். அதுபற்றித் தங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். உளவியல் அல்லது பேச்சுப்பயிற்சிக்கு நீங்கள் சிகிச்சையாளர்களைத் தொடர்புகொள்ளல் வேண்டும். உளவிவேகம் தொடர்பான விடயத்தில் சிகிச்சையாளர்கள் உங்களைத் தொடர்பு கொள்வார்கள்.

## நடைமுறை

- பொதுவில், சிகிச்சையாளர்கள் முதலில் நிலைமையைப் பரிசீலித்து ஆய்வுசெய்வர். பரிசீலனையின் பெறுபேறுகளனின் பிரகாரம், சிகிச்கை முறை முன்மொழியப்படும்.

## மொழிபெயர்ப்பு

- உங்களால் பிரஞ்சு மொழியை கதைக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாதெனில், உங்கள் மொழிபேசும் மொழிபெயர்ப்பாளரை சிகிச்சையாளர் அழைப்பார்.

Tamoul

# உங்கள் பிள்ளையின் பாடசாலையில் சிகிச்சையாளர்ள் (பாடசாலையில் Noréaz / Ponthaux / Prez-vers-Noréaz.)

- *தங்களுக்குத் தகவல் தேவைப்படுமிடத்து, நீங்கள் நேரடியாக பின்வருபவர்களிடம் வினாவலாம் :*

*திருமதி Lola Faure, Inès Deyres (பேச்சுப்பயிற்சியாளர்) - இலக்கம் 026 470 02 21 / 026 470 04 32.*

*திருமதி Sophie Pabst, Georges Albrecth (உளவியல் சிகிச்சையாளர்) - இலக்கம் 026 470 04 32.*

*திருமதி Raphaël Caloz உளவிவேகச் சிகிச்சையாளர்)- இலக்கம் 026 407 38 66.*

*(உளவிவேகச் சிகிச்சையாளர்களின் அலுவலகம் Villars-Sur-Glâne எனும் இடத்தில் உள்ளது)*

*அல்லது*

*SLPPI இன் காரியாலயம்* ***026 407 38 62*** *ல் உள்ளது.*

***Avec le soutien de***

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

ETAT DE FRIBOURG
STAAT FREIBURG

**Bureau de l'intégration des migrant-e-s et de la prévention du racisme** IMR
**Fachstelle für die Integration der MigrantInnen und für Rassismusprävention** IMR

Route de Moncor 14
1752 Villars-sur-Glâne

www.slppi.ch
026 407 38 62
administration.slppi@edufr.ch